தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:15-3-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் தொழில்முனைவோர் மற்றும் வேளாண் உற்பத்தி நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான வேளாண் மதிப்பு சங்கிலி அமைப்பு

இன்றைய கால கட்டத்தில், பருவநிலை மாறுபாடு மற்றும் விலை நிர்ணயம் விவசாயிகளின் உற்பத்திக்கும், வருமானம் ஈட்டுவதற்கும் பெரும் சவாலாக இருந்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டுமெனில், விவசாயிகள் அனைவரும் உற்பத்திசார் வேளாண்மைக்கு மாற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். விவசாயிகளிடத்தில் உற்பத்தி சார் வேளாண்மையை ஊக்குவித்து அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அடிப்படையில் இந்த கருத்தரங்கானது தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் நபார்டு வங்கி இணைந்து **"வேளாண் தொழில்முனைவோர் மற்றும் வேளாண் உற்பத்தி நிறுவனங்களின் மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கான வேளாண் மதிப்பு சங்கிலி அமைப்பு"** நடத்தப்பட உள்ளது.

மார்ச் 16-17, 2018 அன்று தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் உள்ள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற உள்ளது.

வேளாண் தொழில் முனைவோர் மாநாடு – 2018 தொடக்க ஆண்டின் நோக்கமானது, வேளாண் மதிப்பு சங்கிலியின் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் வேளாண் உற்பத்தியாளர் நிறுவனத்தை மேம்படுத்துவதாகும்.

வேளாண் மதிப்பு சங்கிலியில், விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர் நிறுவனத்தை வெற்றிகரமாக முன்னேற்றுவதே இந்த கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும். ஏனெனில், இன்றைய காலக்கட்டத்தில் சந்தை மற்றும் தொழில் நுட்பத்திற்கான இடைவெளியை இணைப்பதென்பது ஒரு சவாலாக உள்ளது. இந்த மாநாட்டில், இரண்டு நாட்களுக்கு வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள் மூலம் குறை தீர்க்கும் விவாதமன்றம் நடத்தப்பட உள்ளது.

வேளாண் தொழில் முனைவோர்கள், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இந்த மாநாட்டின் முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர். உயர் விளைவு தயாரிப்பாளர் நிறுவனங்களை உருவாக்குவதற்கான ஒரு பொதுவான இலக்கை நோக்கி பங்குதாரர்களை ஒருங்கிணைத்தல் இந்த மாநாட்டின் முதன்மை நோக்கமாகும். இந்த தேசிய கருத்தரங்கு வேளாண் உற்பத்தி பங்குதாரர்களுக்கும், இளம் வேளாண் பட்டதாரிகள் மற்றும் வேளாண் சார்ந்த அமைப்பினரையும் சீரமைக்கப்படும் செயல்திறன் சார்ந்த மன்றமாக திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு அலுவலர்